**செ. கு. எண்**:314 **நாள்**:31.08.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 31.8.2012

திருவண்ணாமலை மாவட்டம், மோரணம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. சுப்பிரமணி அவர்கள் 29.8.2012 அன்று மாரடைப்பு ஏற்பட்டு காலமானார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலைநகர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. அன்புசெல்வம் அவர்கள் 24.8.2012 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 29.8.2012 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகர், ஆயுதப் படை, மோட்டார் வாகனப் பிரிவில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. ஜான் ஜெயசீலன் அவர்கள் உடல்நலக் குறைவால் 29.8.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. சுப்பிரமணி, சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. அன்புசெல்வம் மற்றும் தலைமைக் காவலர் திரு. ஜான் ஜெயசீலன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மாரடைப்பால் காலமான காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. சுப்பிரமணி, சாலை விபத்தில் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. அன்புசெல்வம் மற்றும் உடல்நலக் குறைவால் காலமான திரு. ஜான் ஜெயசீலன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**